**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## OS.NO. 26/2020 PW-4

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர், மருதம்பாக்கம் |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 17.02.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நீதிமன்ற அழைப்பானையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மருதம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் (கூடுதல் பொறுப்பாக) பணி செய்து வருகிறேன். நான் முகுந்தராயபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். மருதம்பாக்கம் கிராம நிர்வாக பொறுப்புகளை கூடுதலாக பார்ப்பதனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நத்தம "அ" பதிவேட்டின் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.8** ஆகவும், நத்தம் சிட்டாவின் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.9** ஆகவும், சர்வே எண் 551/42 வின் நத்தம் வரைபடம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.10** ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது.

மருதம்பாக்கம் சர்வே எண் 551/42, கிராம கணக்கை பார்த்து அந்த நிலத்தின் தன்மையை என்னால் சொல்ல முடியும். சர்வே எண் 551/42 என்னுடைய ஆய்வை பொறுத்தவரை கூட்டுபட்டாவில் உள்ளது. 551/42 சர்வே எண் உள்ள கூட்டு பட்டாதாரருக்கு பயன்பாட்டில் சாலை உள்ளது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சர்வே எண் 551/42–ன் கிராம கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். மருதம்பாக்கம் சர்வே எண் 551/42 கிராம வரைபடத்தில் வீடுகள் உள்ளதா என்றால் வரைபடத்தில் குறிப்பிட்டு காணப்படவில்லை ஆனால் வீடுகள் உள்ளது. நீதிமன்ற சம்மனின் அடிப்படையில் சர்வே எண் 551/42 ல் கள ஆய்வு மேற்கொண்டிர்களா என்றால் ஆமாம் அதன் அடிப்படையில் அறிக்கை தயார் செய்தீர்களா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டிர்கள் என்றால் நீதிமன்றத்திலிருந்து சம்மன் கிடைக்கப்பெற்றதனால் விவரங்களை அறிவதற்காக கள ஆய்வு மேற்கொண்டேன்.

பொதுவாக கிராம வரைபடத்தில் வீடுகள் கட்டப்படிருந்தால் அதற்குரிய குறிப்பு காணப்படும் என்றால் ஆமாம், 1994 – க்கு முன்பாக வீடு கட்டப்பட்டிருந்தால் அந்த குறியீடு பதிவு செய்யப்படும் 1994 – க்கு பிறகு குடியிருப்புகள் கட்டப்பட்டிருந்தால் அவ்வாறான குறியீடு செய்வது கிடையாது. சர்வே எண் 551/42 கூட்டு பட்டாவில் இருக்கும் 9 நபர்களும் வீடுகள் கட்டியுள்ளார்களா என்றால் இல்லை 2 பேர் மட்டும் கட்டியுள்ளார்கள். 2 பேர் வீடுகள் தவிர மற்ற இடங்கள் காலி மனையாக உள்ளது என்றால் ஆமாம். குப்புசாமி வீடு கட்டியுள்ளார் அதற்கு பின்னாடி பாலாஜி, அதற்கு பின்னால் ஆறுமுகம் என்பவரும் வீடு கட்டியுள்ளார். அதற்கு பின்புறம் காலியாக உள்ளது.

அந்த வீட்டின் வாசல்கள் எந்த திசையில் கட்டப்பட்டுள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் கிழக்கு பக்க திசையில் தான் கட்டப்பட்டுள்ளது. மூன்று பேரும் கிழக்கு பக்கமாக தான் வாசல் வைத்து கட்டியுள்ளார்களா என்றால் அந்த விவரம் சரியாக எனக்கு தெரியாது. **(வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் கேள்வி பதிவு செய்யப்படுகிறது.)**

**நீங்கள் கள ஆய்வு எதையும் மேற்கொள்ளாமல் யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.